# திருக்குறள்

## கள்ளுண்ணாமை

முனைவர் ஜெ.கரோலின்
தமிழ்த்துறை
தூய யோவான் கல்லூரி
பாளையங்கோட்டை



திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.

அதிகாரங்கள்-133 பாடல்கள்-1330

மூன்று பிரிவுகள் - அறம், பொருள், இன்பம் அல்லது காமம்

அறத்துப்பால் 38 அதிகாரங்கள்

பொருட்பால் 70 அதிகாரங்கள்

காமத்துப்பால் 25 அதிகாரங்கள்

1. உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்

கட்காதல் கொண்டொழுகு வார்.



கள்ளின் மேல் விருப்பம் கொண்டு நடப்பவர், எக்காலத்திலும் பகைவரால் அஞ்சப்படார், தமக்கு உள்ள புகழையும் இழந்து விடுவார்.

2. உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்

எண்ணப் படவேண்டா தார்.




கள்ளை உண்ணக் கூடாது, சான்றோரால் நன்கு எண்ணப்படுவதை

விரும்பாதவர் கள்ளை உண்ண வேண்டுமானால் உண்ணலாம்.

3. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்

சான்றோர் முகத்துக் களி.



பெற்றதாயின் முகத்திலும் கள்ளுண்டு மயங்குதல் துன்பம்

தருவதாகும், அப்படியானால் குற்றம் கடியும் இயல்புடைய

சான்றோரின் முகத்தில் அது எண்ணவாகும்.

4.நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்

பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.



நாணம் என்று சொல்லப்படும் நல்லவள், கள் என்று சொல்லப்படும் விரும்பத்தக்காத பெருங்குற்றம் உடையவர்க்கு எதிரே நிற்காமல் செய்வாள்.

5.கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து

மெய்யறி யாமை கொளல்.



விளைப் பொருள் கொடுத்து கள்ளுண்டு தன் உடம்பைத் தான்

அறியாத நிலையை மேற்கொள்ளுதல், செய்வது இன்னதென்று

அறியாத அறியாமை உடையதாகும்.

6. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்

நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.



உறங்கினவர் இறந்தவரை விட வேறுபட்டவர் அல்லர்,

அவ்வாறே கள்ளுண்பவரும் அறிவுமயங்குதலால் நஞ்சு

உண்பவரே ஆவர்.

7. உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்

கள்ளொற்றிக் கண்சாய் பவர்.



கள்ளை மறைந்திருந்து குடித்து அறிவு மயங்குபவர், உள்ளூரில் வாழ்கின்றவரால் உள்ளான செய்திகள் ஆராயப்பட்டு எந்நாளும் சிரிக்கப்படும்.

8. களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.



கள்ளுண்பவன் யான் ஒருபோதும் கள்ளுண்டறியேன் என்று சொல்வதை விட வேண்டும், நெஞ்சில் ஒளிந்திருந்த குற்றமும் கள்ளுண்டபோதே வெளிப்படும்.

9. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்

குளித்தானைத் தீத்துரீஇ அற்று.



கள்ளுண்டு மயங்கினவனைக் காரணம் காட்டி தெளிவித்தல், நீரின் கீழ் மூழ்கின ஒருவனைத் தீவிளக்கு கொண்டு தேடினாற் போன்றது.

10. கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்

உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.




ஒருவன் தான் கள் உண்ணாத போது கள்ளுண்டு மயங்கினவனைக் காணுமிடத்தில் உண்டு மயங்குவதால் வரும் சோர்வை நினைக்கமாட்டானோ.

# நன்றி !